**தலைப்பு 133 – தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

**கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,767,160,037 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 2,947,949,146 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 819,210,891 அல்லது 22 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 1,293,000,000 | 1,111,543,826 | 181,456,174 | 14 |
| மூலதனம் | 2,474,160,037 | 1,836,405,320 | 637,754,717 | 26 |
| மொத்தம் | 3,767,160,037 | 2,947,949,146 | 819,210,891 | 22 |

**(ii) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஏழு செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 5,670,037 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

- நிர்வாகம் காரணமாக நிதி ஏற்பாடுகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் 92 செலவின விடயங்களிற்கான நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 5 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சுக்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 13301 | 27,000,000 | 14,767,989 | 10,000,000 | 15,729,067 | 85,000,000 | 53,944,194 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விடய இலக்கம் 13301 இற்குரிய முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 403,016 கூட்டுமொத்தமாக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ii) அமைச்சினால் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 30,000 கடன் செலுத்தப்பட்டிருந்தது.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற விதாதா நிலையங்களில் பின்வரும் சொத்துக்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தியும் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

| விதாதா நிலையம் | பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள் |
|---|---|
| (i) தெஹிஓவிட | உலர்த்தும் இயந்திரம் மற்றும் விறகு வாயு அடுப்பு |
| (ii) யடியன்தொட | உலர்த்தும் இயந்திரம் மற்றும் 06 கணனிகள் |
| (iii) ரம்புக்கன | உலர்த்தும் இயந்திரம், 2 தேங்காய் எண்ணெய் தயாரித்தல் இயந்திரம் மற்றும் பலாக்கொட்டை தோல் அகற்றும் இயந்திரம் |

| | |
|---|---|
| (iv) புலத்கொஹுபிட்டிய | மோட்டார் சைக்கிள், செய்மதி கிரக உபகரணத் தொகுதி |
| (v) பாதுக்க | விறகு வாயு அடுப்பு, தேங்காய் எண்ணெய் தயாரித்தல் இயந்திரம் மற்றும் 05 கணனிகள் |
| (vi) சீதாவக | விறகு வாயு அடுப்பு மற்றும் தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரம் |
| (vii) மஹரகம | உலர்த்தல் இயந்திரம், வெதுப்பக அடுப்பு, மண்ணெண்ணை அடுப்பு மற்றும் யோகட் இன்கியுப்லேடர் |
| (viii) நீர்கொழும்பு | உலர்த்தல் இயந்திரம், வெதுப்பக அடுப்பு, விறகு வாயு அடுப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் தயாரித்தல் இயந்திரம் |
| (ix) மீரிகம | உலர்த்தல் இயந்திரம் மற்றும் வெதுப்பக அடுப்பு |

**1.5 செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் காணப்பட்ட நலிவுகள்**

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

அமைச்சினால் பின்வரும் செயற்திடங்கள் கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 12 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூரணப்படுத்த வேண்டிய திகதி | 2013 திசெம்பர் 31 வரை செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| முசலி விதாதா நிலைய நிர்மாணம் | 8,163,058 | 2012 சனவரி | 2013.12.31 | 2,869,817 | நிர்மாண ஒப்பந்ததாரரும் மன்னார் பிரதேச செயலாளரும் மெதுவாக நடவடிக்கை எடுத்திருந்தமை |
| கஹவத்த விதாதா நிலைய நிர்மாணம் | 8,314,823 | 2012 சனவரி | 2012.09.14 | 2,175,370 | மாவட்டச் செயலாளருக்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையில் ஏற்பட்ட சட்டரீதியான சிக்கல்கள் |

## 1.6 செயலாற்றுகை

### திட்டமிடுதல்

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கி செயற்பட்டிருக்காமை

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கி செயற்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(அ) 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 11 விதாதா நிலையங்கள் ரூபா 38.25 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் பூரணப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆண்டின் இறுதியளவில் அந்த நிர்மாணங்களிற்காக ரூபா 37.803 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருந்த நிலையங்களின் எண்ணிக்கை 07 மாத்திரமேயாகும். அதற்கு மேலதிகமாக, செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத விதாதா நிலையமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) விதாதா நிலையத்திற்காக செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கையில் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டத்திற்காக முன்னுரிமை வழங்கப்பட்டிருந்த போதிலும், நடைமுறை நிலைமையினை கருத்தில் எடுத்திருக்காமை காரணமாக சகல நிலையங்களும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை அடைந்து கொள்வதில் சிக்கலை எதிர்நோக்கியிருந்ததுடன், திட்டத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தியிருந்தன. 2013 சனவரி முதல் யூன் வரை அமுல்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விதாதா நிலையம் | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நலனாளிகளின் எண்ணிக்கை | நடத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நலனாளிகளின் எண்ணிக்கை | திட்டத்திற்கு புறம்பாக நடத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நலனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| மாவனல்ல | 26 | 586 | 15 | 375 | 13 | 536 |
| தெஹிஓவிட | 24 | 1325 | 04 | 170 | 20 | 463 |
| யடியன்தொட்ட | 23 | 760 | 04 | 48 | 16 | 268 |
| ருவன்வெல்ல | 22 | 670 | 13 | 465 | 12 | 608 |
| ரம்புக்கன | 31 | 629 | 11 | 314 | 16 | 250 |
| நீர்கொழும்பு | 29 | 445 | 05 | 86 | 16 | 184 |
| மீரிகம | 33 | 725 | 19 | 579 | 02 | 65 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மினுவன்கொட | 25 | 1250 | 31 | 389 | - | - |
| திவுலபிடிய | 27 | 740 | 08 | 257 | 06 | 308 |
| பாதுக்க | 32 | 831 | 10 | 223 | 06 | 152 |
| சீதாவக | 37 | 1143 | 04 | 41 | 21 | 968 |
| மஹரகம | 27 | 157 | 07 | 157 | 04 | 101 |

(இ) அமைச்சினால் ஜா-எல விதாதா நிலையத்திற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தை அங்கீகரிக்கையில் ஒவ்வொரு காலாண்டுகளின் பின்னரும் விளைச்சல் தொழில்நுட்பம் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வீதம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குச் சென்று நடாத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பாதுக்க விதாதா நிலையம் நடாத்தி வரப்படுகின்ற கட்டிடம் மற்றும் மினுவன்கொட விதாதா நிலையம் நடாத்தி வரப்படுகின்ற கட்டிடம் என்பன முறையே ரூபா 15,000 மற்றும் ரூபா 10,000 வீதம் மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கான வாடகை உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மாவனல்ல விதாதா நிலையத்தின் புதிய கட்டிடத்தினை நிர்மாணித்தல் ஒப்பந்த உடன்படிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுத் திகதியளவில் குறித்த நிறுவனத்திடமிருந்து வேலைகளை நிறுத்தியமைக்கான நட்டமாக ரூபா 27,416 தொகையினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹரகம விதாதா நிலையத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட வெதுப்பக அடுப்புக்குரிய 03 மரத்தூள் அடுப்புகள் காணாமல் போயிருந்ததுடன், அது தொடர்பாக 2013 சனவரி 31 ஆந் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் அமைச்சு அறிவித்திருக்கவில்லை.

## 1.9 முகாமைத்தவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ''நிநிதி'' தொழில்நுட்ப பூங்காவை தாபிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த 48 ஏக்கர் காணி கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 12 ஆந் திகதி வரை அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க விலைமதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்ளாது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆரம்ப உள்ளக விலைமதிப்பீட்டின் அடிப்படையில் ''நிநிதி'' தொழில்நுட்ப பூங்கா தாபிக்கப்பட்டிருந்த 48 ஏக்கர் காணிக்காக அமைச்சினால் ரூபா 304,708,482 செலவிடப்பட்டிருந்தது.

(இ) மன்னார், முசலி விதாதா நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான காணி கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 12 ஆந் திகதி வரை அமைச்சுக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அமைச்சினால் நடாத்திவரப்படுகின்ற விதாதா நிலையங்கள் தொடர்பில் பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பொருட்களை வழங்குகையில் சகல விதாதா நிலையங்களிற்கும் ஒரே வகையான பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தந்த பிரதேசங்களின் சிறப்புத்தன்மையின் படி தேவைகளை இனங்கண்டு பொருட்களை வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) அமைச்சினால் விதாதா நிலையங்களின் தேவைகளை இனங்கண்டு கொள்வதற்காக அந்தந்த நிலையங்களிற்கு சமூகமளித்து கண்காணிப்புச் செய்தல் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) விதாதா உத்தியோகத்தர்களிற்கும் வெளிக்கள உத்தியோகத்தர்களிற்கும் அறிவை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய பயிற்சிகள் பல வருடங்களாக இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) பயிற்சி நிகழ்ச்சிகளிற்காக வளவாளர்களை ஈடுபடுத்துகையில் நிலையங்களில் வருகைப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(v) விதாதா நிலையங்களில் வெளிச் செல்லல் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) விதாதா நிலையங்களிலிருந்து பொருட்களை வெளியில் எடுத்துச் செல்கையிலும் மீண்டும் பொறுப்பேற்கையிலும் உரியவாறு பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(vii) வெளிக்கள கடமைகளிற்காக எவ்வித மதிப்பீடுகளும் செய்யப்படாது மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், சில அத்தியாவசியாமான நிலையங்களிற்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(viii) வெளிக்கள உத்தியோகத்தர்களினதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினதும் எதிர்கால நிகழ்ச்சிநரல்கள் பிரதேச செயலாளருக்கு ஒப்படைத்து அங்கீகாரம் பெறப்பட்டு நிலையத்தில் பிரதியொன்றை வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) நிலையங்களிற்காக வெளிக்கள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்காமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சிகளிற்காக தொழில்முயற்சியாளர்களை இனங்காணல், பயிற்சி செயலமர்வுகளிற்கான மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல், கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் விதாதா சங்கங்களை தாபித்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல் போன்ற அத்தியாவசிய கடமைகள் நிலையங்களிற்கு கிடைத்திருக்கவில்லை.

## 1.10 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட நிலை | 23 | 16 | 07 |
| ii. | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| iii. | இரண்டாம் நிலை | 768 | 672 | 96 |
| iv. | ஆரம்பத் நிலை | 234 | 230 | 04 |
| v. | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 02 | 01 | 01 |
| | மொத்தம் | 1031 | 922 | 109 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 109 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் மீளாய்வாண்டில் ஏனைய தரப்பினர்களிற்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பு |
|---|---|---|
| விஞ்ஞான, தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 02 | கோள் மண்டலம் |
| -மேற்படி- | 01 | அடிப்படை கல்வி நிறுவனம் |
| -மேற்படி- | 01 | இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் |